PUBLIC SERVICES
INTERNATIONAL

*The global union federation of workers in public services*

8

TAMIL

சுருக்க உரை 8



# கார்ப்பரேட் வரியை நிர்ணயித்தல்

## பயன்பெறும் முதலாளிகள் பற்றிப் பொதுப் படையாக்க தொழிற் சங்கங்கள் கோரிக்கை

# பயன்பெறும் முதலாளிகள் பற்றிப் பொதுப் படையாக்கல்

## சிக்கல்: மறைமுகமான முதலாளிகள், மறைமுகமான செல்வம்

உலகெங்கும் சில பிரதேசங்களையோ குழுமங்களையோ மற்ற சட்ட பூர்வ குழுக்களையோ -அறக் கட்டளைகள், நிறுவனங்கள் போன்றவை- அதன் முதலாளிகள் மற்றும் அதன் சொத்துக்களை நிர்வகிப்பவர்களது அடையாளங்களைப் பொதுப் படையாக்க வற்புறுத்துவ தில்லை. அதாவது இவை மூலம் வரி ஏய்க்க, குற்றமுள்ள சொத்துக்களை மற்றும் ஊழல் பணங்களை மறைக்கலாம்.

## முக்கியமான அம்சம்:

### தொழிற் சங்கங்கள் அரசுகளிடம் கோர வேண்டியவை:

- குழுமங்கள் அறக்கட்டளை மற்றும் பிற நிறுவனங்களது உண்மையான முதலாளிகளைப்பற்றிய பொதுப் பதிவேடுகளை உருவாக்குக

ஒரு குழுமத்தின், அறக்கட்டளையின் அல்லது நிறுவனத்தின் கடைசி நிலை பயன்பெறும் முதலாளிகள் அதன் பங்குதாரராக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அதை அவர் பிற குழுமங்கள் மூலம் உடைமை ஆக்கியிருக்கலாம். சட்டத்தை அமலாக்கும் துறைகளின் பிடியில் சிக்காதபடி ஊழலும் மோசடித் திட்டங்களும் அனாமதேய சட்டபூர்வ நிறுவனங்களை வெவ்வேறு எல்லையில் வைத்திருக்கும்.

பனாமா பேப்பர்ஸ் மற்றும் வரிப் புகலிடத்திலிருந்து பிற ரகசியக் கசிவும் பதிவுகள் நூற்றுக்கணக்கான அரசியல்வாதிகள், வணிகர்கள், மற்றும் பிற பிரபலப் பிரமுகர்கள் உலகெங்கும் அநாமதேயக் குழுமங்களைத் தங்கள் செல்வங்களைக் கடல்கடந்து மறைத்து வைக்கப் பயன்படுத்துகின்றனர். இதனால் அவர்களது நாடுகளே இப் பணத்தின்மீது வரி விதிக்கமுடியாது. அதனால் பெறும் பணத்தால் பொதுப் பணிகளைத் தொழிலாளரும் குடும்பமும் எதிர்பார்க்கும் கல்வி, மருத்துவம் தர இயலாது.

அநாமதேயக் குழுமங்கள் ஊழல்வாதிகளான செயல் அலுவலர் அல்லது நிர்வாகிகளும் பங்குதாரர் வணிகத்திலிருந்து பணத்தை உறிஞ்சி வணிகம் தோற்கும்படி செய்து தொழிலாளர்கள் வேலை இழக்குமாறு செய்கின்றனர். அதுபோல ஊழல் அரசியல்வாதிகள் அநாமதேயக் குழுமங்களது திட்டமிட்ட குற்றங்களுக்கு தீவிரவாதிகளும்கூட தங்கள் பண நடமாட்டத்தை மறைக்கப் பயன்படுத்துகின்றனர்.



**“அநாமதேயப் போலிக் குழுமம் நிறுவ எவருக்கும் நியாயமான காரணம் இல்லை”**

**எம். ஓ. இப்ராஹிம்,**
**முதலீட்டாளர்**

இச்சிக்கல்களைக் களைய, குழுமங்களது கடைசிநிலைப் பயன் பெறும் முதலாளிகள் பற்றி குழுமத்தை சொந்தமாக நடத்துபவர் பொதுப் படையாக கசிவுகள், இனங்காட்டுவோர்கள் மூலமாக மட்டும் அல்ல. இதே விதி கடைசி நிலைப் பயன்பெறும் நபரது சொத்துகளையும் மறைக்கப் பயன்படுவதால் அறக்கட்டளைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

வரி நீதி இயக்கம் ஆண்டுக் கணக்காக எல்லா நாடுகளுக்காகவும் பிரதேசங்களுக்காகவும் கடைசிநிலை பயன்பெறும் முதலாளி குழுமங்கள், அறக்கட்டளை மற்றும் பிற நிறுவனங்கள் பற்றிப் பதிவேடுகளை உருவாக்கி அவற்றைப் பொதுப் படையாக்கச் செய்துள்ளன. இப்படிப்பட்ட பொதுப் பதிவேடு ஊழல்வாதிகளுக்கு தங்கள் சொத்தைக் கார்ப்பரேட் ரகசியங்களில் மறைப்பது கடினம் ஆகும்.

தீர்க்கப்படவில்லை ஆயினும் இச் சிக்கலில் கொஞ்சம் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சுரங்கத் தொழிற் சாலைகளது வெளிப்படையாக்கும் முனைப்பு (EITI) எனும் உலகளாவிய எண்ணெய், வாயு மற்றும் சுரங்கத் தொழிலாளர்களுக்கான முனைப்பு, தன் கிட்டத்தட்ட 50 அமலாக்கும் நாடுகள் பயன்பெறும் முதலாளிகள்பற்றி 2020இல் பதிவேடுகளைக் கடைபிடிக்க வேண்டுகிறது. இங்கிலாந்து ஏற்கனவே தன் பொதுப் பதிவேட்டைக் கடைபிடித்து மே 2018 இல் சட்டம் இயற்றியது. அதன்படி கடல்கடந்த நாடுகளில் மோசத்துக்குப் பேர்போன வரிப் புகலிடங்களான கேமன் தீவுகள் மற்றும் பிரிட்டிஷ் வெர்ஜின் தீவுகள் இவற்றை வரும் காலத்தில் கடைபிடிக்கச் செய்கிறது.

பிற நாடுகள் - ஆயினும் அமெரிக்கா - உலகின் மிகப்பெரிய வரிப் புகலிடங்களின் அதிக அளவில் ரகசியங்களைக் காக்கும்- -எல்லாம் மறுக்கின்றன. அமெரிக்கா கொள்கை அளவில் தன் மாநிலங்களில் குழுமங்களது அனாமதேய முதலாளித்துவத்தை முடிவுக்கு கொண்டு வர ஒப்புக் கொண்டாலும் எந்த மாநிலமும் இதை ஒரு தேவையாகக் கருதாமல் ஒன்றோடொன்று தன் நிதி மற்றும் சொத்துக்களை மறைக்கும் மக்களை ஈர்க்கப் போட்டியிடுகின்றன. இதனால் அமெரிக்காவுக்கு வெளியே சிறு பிரதேசங்கள் வெளிப்படைத் தன்மையைத் தடுக்க அரசியல் ஆதரவு கிடைக்கிறது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பயன்பெறும் முதலாளிகள் பற்றிப் பதிவேடுகளை உருவாக்க ஒப்புக்கொண்டன. ஆனால் பின்னதன் அறக் கட்டளைகளை அணுக ‘சட்டபூர்வ நலன்’, உள்ளவர்களால் மட்டுமே முடியும். இங்கிலாந்துப் பதிவேடு பரவலாகப் பயன்படுகிறது. ஆனால் அதன் தரம் வலுவற்றது- காரணம் தகவல்களை சரிபார்க்க வளங்கள் போதாது மற்றும் பின்பற்றாமைக்கு அனுமதியின்மையே காரணம்.


Multinationales,
payez votre part
d'impôts!
Alliance mondiale pour la justice
GlobalTaxJustice.org


bal Week of Action 19-23 June 2017 globa
TaxJustice for #PublicSe

# மேலும் வெளிப்படைத்தன்மை தேவை

ஐசிஆர்ஜசிடி, பபொப -வின் ஆதரவுடன் உலகளாவிய சொத்துப் பதிவேடு - குழுமத்தின் அறக்கட்டளை மற்றும் பிற நிறுவனங்களால் பயன்பெறும் முதலாளிகள் நிதிப் பாதுகாப்புத் தகவல்கள், சொத்துகள் மற்றும் பிற உடைமைகளைக் கொண்டவையாக இருக்க நடைமுறைப்படுத்தக்கூடியவாறு செய்யத் தொடங்கி உள்ளது. உலகளாவிய பதிவேடு, நிதிக் குற்றங்களுக்கு எதிராகவும் வருவாய்க்கு முறையான வரி விதிக்கவும் செய்வதே இதன் நோக்கம்.

தொழிலாளர்கள் மற்றும் பிற குடிமக்களைப் பொறுத்தவரை வரி விதிப்பு சரியாக உள்ளதெனப் பணக்காரர்களும் கார்ப்பரேட்களும் தங்கள் சொத்து என்ன, எங்கு உள்ளது என்று வெளிப்படையாகக் கூறாது எனக் கூற முடியாது. பலநாடுகளில் தொழிலாளர்கள் தங்கள் சொந்த வீடு, கார்கள், நாய்கள் பற்றிக்கூடப் பதிவு செய்ய வேண்டும்.பணக்காரர்களுக்கும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் வெளிப்படைத்தன்மை இயலாதது அல்ல.

மேலும் நடவடிக்கைகள் தேவை. மறைமுகமான குழும, அறக் கட்டளைகள் உரிமையைத் தரும் பிரதேசங்கள் கடல்கடந்த நடவடிக்கைகளுக்கு முக்கியமானவை. பன்னாட்டுக் குழுமங்கள் வரி தவிர்க்கப் பயன்படுத்துவதோடு கணக்கு எழுதும் தந்திரங்கள், உரிமையை மறைப்பதற்கும் மேலாக லாபங்களை மறைக்கின்றனர்.

ஆக, அரசுகள் கார்ப்பரேட்களும் பெரும் பணக்காரர்களும் தங்கள் பணத்தை வரிப் புகலிடத்திற்கு மாற்றுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். (சுருக்க உரை 3 வரிப் புகலிடத்திற்கு எதிரான நடவடிக்கைகள் .)

# என்ன நடக்க வேண்டும்?

1. தொழிற் சங்கங்கள் ஒவ்வொரு நாடு, பிரதேசங்களுக்கும் பதிவேடுகளை அறிமுகம்செய்து கடைசிநிலை பயன்பெறும் குழும, அறக் கட்டளை, நிறுவன முதலாளிகள் அப்பகுதியில் பதிவு செய்தபடி கடைபிடிக்கவேண்டும். பதிவேடு, தெளிவாக, பொதுப் படையாக பெரிதும் பயன்படுத்தக் கூடியதாக அன்றாடப் பதிவுகளுடன் சரிபார்க்கப்பட்டதாயும் இருக்கவேண்டும்.
2. சில நாடுகளில் இப்போது உள்ள ஏடுகளைப் பொதுமக்களுக்கு வெளிப்படையாக்கல் அல்லது அதன் தரத்தை உயர்த்தல் மற்ற நாடுகளில் இது ஒரு பதிவேட்டை உருவாக்கி- கடைசிநிலைப் பயன்பெறும் முதலாளிகளது அடையாளங்களை சட்டபூர்வ தேவையாக்கி - உரிய அங்கீகாரத்தைப் பின்பற்றாதவர்களால் ஆதரிக்கப்படுதல்.
3. தொழிற் சங்கங்கள் அரசுகளிடம் வற்புறுத்த வேண்டியது- தேசிய வரித்துறைக்கு வளங்களும் அரசாங்க ஆதரவும் தந்து பணக்காரக் குடிமக்கள் கடல்கடந்து வரிப் புகலிடத்தில் மறைத்து வைத்துள்ள சொத்துகள்பற்றி அறிய செய்ய வேண்டும். (சுருக்க  உரைகள் 3,  6 காண்க).



# மேலும் தகவலுக்கு:

## வரிநீதி நெட்வொர்க்.

வரிநீதி நெட்வொர்க் கடல்கடந்த ரகசியம்பற்றிய செயல்கள் https://www.taxjustice.net/topics/secrecy/the-mechanics-of-secrecy/ அணுகுக.

## ஐசிஆர்ஐசிடி

பபொப ஆதரவு மற்றும் குடியுரிமைச் சமூகக் குழுமங்களது ஆதரவு பெற்ற பன்னாட்டு அமைப்பான இது தன் பக்கத்தில் உலகளாவிய சொத்துப் பதிவேடுபற்றி சுருக்க உரை வெளியிட்டுள்ளது

http://psishort.link/gar அணுகுக:

## நிதி வெளிப்படைத்தன்மைக் கூட்டுறவு

குடியுரிமை சமுதாயக் கூட்டுறவு தன் சொந்த வளமான பகுதியில் சொந்தத்துவ ரகசியத்தைக் கூறுகிறது https://financialtranspar-ency.org/issues/beneficial-ownership/ அணுகுக

PSI

FRIEDRICH EBERT STIFTUNG

இந்தப் பதிப்பு உருவாகக் காரணமான ஃப்ரெட்ரிக் எபேர்ட் ஸ்டிஃப்டங் அவர்களது தாராளமான ஆதரவுக்கு நன்றி:
WWW.FESDC.ORG

PUBLIC SERVICES INTERNATIONAL

45 AVENUE VOLTAIRE, BP 9
01211 FERNEY-VOLTAIRE
CEDEX, FRANCE

TEL: +33 4 50 40 64 64
E-MAIL: PSI@WORLD-PSI.ORG

WWW.WORLD-PSI.ORG

பன்னாட்டுப் பொதுப் பணிகள் ஆனது உலகளாவிய தொழிற் சங்கங்களது சம்மேளனமாக, 163 நாடுகளில் பொதுப் பணி செய்யும் 20 மில்லியன் ஆண், பெண் தொழிலாளர்களுக்கான முகவராக உள்ளது. பன்னாட்டுப் பொதுப் பணிகள் மனித உரிமைகளுக்காகவும் சமூக நீதிக்கு ஆதரவாகவும், தரமான பொதுப் பணிகளை மேம்படுத்த இயங்குகிறது. பன்னாட்டுப் பொதுப் பணிகள், ஐக்கிய நாடுகள் அமைப்பு போல், தொழிலாளர்கள், குடியுரிமைச் சமூகம் மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைந்து இயங்குகிறது.